


**11. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு விழிப்புணர்வு நிகழ்ச்சியை முதலமைச்சர் திரு. விஜய் இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

2. நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தும் அரசினர் தனித்தீர்மானம் சட்டப் பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

3. வெளிநாட்டு நிதி பங்களிப்பு ஒழுங்குமுறை திருத்த மசோதாவிற்கு எதிரான அரசினர் தனித் தீர்மானத்தை மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு, ராஜ்மோகன் இன்று சட்டப் பேரவையில் முன்மொழிந்தார்.

4. பிரதமரின் இல்லந்தோறும் சூரியஒளி மின்சக்தி திட்டத்தின் கீழ் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் பயனடைந்து இருப்பதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தொிவித்துள்ளார்..

5. தமிழகத்தில் 6 அரசு கல்வியியல் கல்லூரிகளில் M.Ed. படிப்புகளுக்கு மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்ப பதிவு இன்று தொடங்கியது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு விழிப்புணர்வு நிகழ்ச்சியை முதலமைச்சர் திரு. விஜய் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை மாநில கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் போதை பொருள் இல்லா தமிழ்நாடு விழிப்புணர்வு உறுதிமொழி முதலமைச்சர் தலைமையில் ஏற்கப்பட்டது.

போதைப்பொருள் ஒழிப்பில் சிறப்பாக செயல்பட்ட காவலர்களுக்கு முதலமைச்சர் பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

போதைப்பொருள் எதிர்ப்பு மன்றங்களை சிறப்பாக செயல்படுத்திய பள்ளி கல்லூரிகள் மற்றும் தன்னார்வலர் குழுக்களுக்கும் பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகளை முதலமைச்சர் அளித்தார்.

திருச்சி, மதுரை, விழுப்புரம் திருவண்ணாமலை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, தர்மபுரி உள்ளிட்ட மாநிலத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஆட்சித்தலைவர்கள் தலைமையில் போதைப்பொருள் தடுப்பு உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

ச.பே. - அருண் ராஜ்

நீட் தேர்வு முறைக்கேடுகளை கருத்தில் கொண்டும், 12-ம் வகுப்பு தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையிலேயே மருத்துவர் மாணவர் சேர்க்கையை மேற்கொள்ளும் வகையிலும் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித்தீர்மானம் இன்று சட்டப் பேரவையில் நிறைவேறியது.

முன்னதாக தமிழக சட்டப்பேரவையில் நீட் தேர்வை ரத்துசெய்ய வலியுறுத்தும் தனி தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ், திறமையுள்ள அனைவருக்கும் மருத்துவக்கல்வி கிடைக்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

12-ம் வகுப்பு தேர்வு மதிப்பெண் அடிப்படையில் முன்பு மாணாக்கர் சேர்க்கை நடைபெற்றது என்று சுட்டிக்காட்டிய அவர், இதனால் கிராமப்புற மாணாக்கர்கள் பயனடைந்தனர் என்று கூறினார்.

ஒருநாள் நடைபெறும் நீட் தேர்வு மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்க கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீட் தேர்வால் தனியார் பயிற்சி மையங்கள்தான் அதிக பலன்பெறுவதாகவும், பெற்றோர் இதற்காக அதிகம் செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீட் தேர்வால் விவசாயிகளின் குழந்தைகளுக்கு ஒரே மாதரியான பயிற்சி கிடைப்பதில்லை என்றும், சமூகத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரித்துள்ளதாகவும் கூறினார்.

தமிழக சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட இந்த தனி தீர்மானத்திற்கு மத்திய அரசு மதிப்பளிக்க வேண்டும் என்றும்,

கல்வியை பொதுப்பட்டியலிலிருந்து மாநில பட்டியலுக்கு மாற்றவேண்டும் என்றும் டாக்டர். அருண்ராஜ் கேட்டுக்கொண்டார்.

இந்த தீர்மானத்திற்கு தி.மு.க., அஇஅதிமுக. காங்கிரஸ், பா.ம.க. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், வி.சி.க., மனிதநேய ஜனநாயகம் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தொிவித்தன.

இந்த தீர்மானத்தின் மீது பேசிய பி.ஜே.பி. உறுப்பினர் திரு. போஜராஜன், நீட் பயிற்சி மையங்களை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்றும், மாணாக்கர் பயன்பெறும் வகையில் புதிய திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கோரினார்.

தமிழக அரசின் தனித்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் தாம் கலந்துகொள்ளமால் வெளியேறுவதாக கூறி அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.

❖❖❖❖❖❖❖❖

ராஜ்மோகன்

வெளிநாட்டு நிதி பங்களிப்பு ஒழுங்குமுறை திருத்த மசோதாவிற்கு எதிரான அரசினர் தனித் தீர்மானத்தை மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு, ராஜ்மோகன் இன்று சட்டப் பேரவையில் முன்மொழிந்தார்.

தொடர்ந்து பேசிய அவர் மத்திய அரசின் இந்த சட்ட திருத்தத்தால், சிறுபான்மையின கல்வி, மருத்துவ நிறுவனங்கள் பாதிக்கப்படும் என்று கூறினார்.

பல்வேறு சிறுபான்மையின சமூக அமைப்புகள் முதலமைச்சரை சந்தித்து இந்த சட்டத்திருத்தத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நேற்று எடுத்துரைத்ததாகவும் அவர் கூறினார்.

மருத்துவமனைகள், ஆதரவற்றோர், முதியோர் பராமரிப்பு இல்லங்கள், சமூக நல கட்டமைப்புகள், ஆராய்ச்சி நிலையங்கள்,

உள்ளிட்டவை பாதிக்கப்படுவது குறித்தும் அமைச்சர் விளக்கமளித்தார்.

திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மனிதநேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், வி.சி.க. உள்ளிட்ட கட்சிகள் இந்த தனித்தீர்மானத்தை வரவேற்றுள்ளன.

பேரவையில் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

விஜய் பாலாஜி

தமிழ்நாட்டில் வரும் பொங்கல் பண்டிகையை ஒட்டி குடும்ப அட்டைதாரரர்களுக்கு வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்காக 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாநில கைத்தறி துறை அமைச்சர் திரு.விஜய்பாலாஜி கூறியுள்ளார்.

பேரவையில் இன்று பட்ஜெட் மீதான பொது விவாதத்தின் போது, இதுதொடர்பாக உறுப்பினரின் கேள்விக்கு அவர் பதிலளித்தார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை

பட்ஜெட் மீதான பொது விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய தி.மு.க. உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி த.வெ.க. ஆட்சிக்கு வந்ததாக கூறினார்.

த.வெ.க ஆட்சியில் உள்ள அனைத்தும் தி.மு.க. அரசின் திட்டங்களாகவே உள்ளதாக குறிப்பிட்டார்.

பட்ஜெட்டில் திட்டங்களுக்கு நிதிப்பகிர்வு போதுமானதாக இல்லை என்றும் குறைக்கப் பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

வருவாயை பெருக்க பட்ஜெட்டில் திட்டங்கள் இல்லை என கூறியஅவர், வருவாய் மதிப்பீட்டின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்பினார்.

காவிரி மற்றும் மேகதாது அணை பிரச்சனைகளுக்கு நீதிமன்றத்தின் மூலம் தான் தீர்வு எட்டமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

மக்களவை

நாடுமுழுவதும் இதுவரை 10 கோடியே 33 லட்சத்திற்கும் அதிகமான விவசாய அட்டைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் இணை அமைச்சர் திரு. ராம்நாத் தாகூர் தொிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு எழுத்துப் பூர்வமாக அவர் அளித்த பதிலில், விவசாயிகள் தத்தம் கைப்பேசிகளிலேயே வேளாண் அட்டை பெற பதிவு செய்து கொள்ளலாம் என்றார்.

இந்நடவடிக்கை மூலம் விவசாயிகள் டிஜிட்டல் வேளாண் இயக்கத்தின் பயன்களை பெறமுடிவதோடு, விவசாயம் சார்ந்த சேவைகளை தடையில்லாமல் பெறமுடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

பயிர்களின் மீதான எல்நினோ தாக்கத்தை மத்திய அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அவர் கூறினார்.

மத்திய நீர் ஆணையமும், மாநில அரசுகளும் எல்நிநோ தாக்கத்தை எதிர்கொள்வதற்கு முன்னதாகவே உரிய வேளாண் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

சூரிய மின்சக்தி

பிரதமரின் இல்லந்தோறும் சூரியஒளி மின்சக்தி திட்டத்தின் கீழ் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் பயனடைந்திருப்பதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தொிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த அவர், இதற்காக 28 லட்சம் கோடி ரூபாய் மானிய நிதி இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நடப்பு நிதியாண்டின் பொது பட்ஜெட்டில் இந்த திட்டத்திற்கு 22 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

நீட் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்றபோது, நீட் விவகார பிரச்சனையை எதிர்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினர்.

மாணாக்கர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரத்தில் உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா மக்களவையில் அறிக்கை வெளியிடவேண்டும் என்று எதிர்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இந்த அறிக்கையை அளிக்க அமைச்சர் திரு. அமித்ஷா தயாராக இருப்பதாக, அமைச்சர் திரு. கிரண் ரஜிஜு நேற்று தெளிவுப்படுத்தியதை அவைத்தலைவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்கட்சியினரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டதால் அவை சுமூகமாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவை அலுவல்களுக்கு தொடர்ந்து இடையூறு ஏற்படுவது குறித்து அவர் கவலை வெளியிட்டார்.

தேசிய நலன்சார்ந்த முக்கிய மசோதாக்கள் நிலுவையில் உள்ளதாகவும், அதற்கான விவாதம் நடத்தப்பட வேண்டுமென்றும் கோரினார்.

ஆனால் உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் பிற்பகல் வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக மாநிலங்களவையில் வீட்டுவசதி, நகர்ப்புற விவகாரங்கள், ஊரக மேம்பாடு, பஞ்சாயத்துராஜ், போக்குவரத்து, சுற்றலா, கலாச்சாரம், சமூகநீதி மற்றும் அதிகாரமளிப்பு துறைகள் சார்ந்த நாடாளுமன்ற நிலைக்குழு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖

M.Ed.

தமிழகத்தில் 6 அரசு கல்வியியல் கல்லூரிகளில் M.Ed. படிப்புகளுக்கு மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்ப பதிவு இன்று தொடங்கியது.

மாணாக்கர் tngasa.in என்ற இணையதளம் வாயிலாக வரும் 20-ம் தேதிவரை விண்ணப்பிக்கலாம்.

வரும் 25-ம் தேதி தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டு,

வரும் 27-ம் தேதிமுதல் 31-ம் தேதிவரை மாணாக்கர் சேர்க்கை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

கலந்தாய்வு

MBBS BDS உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான பொதுப்பிரிவு ஆன்லைன் கலந்தாய்வு நாளைமறுநாள் தொடங்குகிறது.

சென்னை ஓமாந்தூரா◌ா◌் அரசு மருத்துவமனையில் சிறப்பு பிரிவு மாணாக்கருக்கு நேரடி கலந்தாய்வும் நாளைமறுநாள் தொடங்குகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய மின் மோட்டார்கள் வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திரு. ஸ்ரீகாந்த் தொ◌ிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

மேட்டூர்

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து நண்பகல் நிலவரப்படி 9 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் 2-வது நாளாக இன்று தடைவிதித்துள்ளதாக எமது செய்தியாளர் தொ◌ிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு இன்று விநாடிக்கு 7 ஆயிரத்து 151 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 79.17 அடியாகும்.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

மறைவு

திருச்சி ஆகாஷவாணி, தஞ்சை L.P.T, சென்னை தூர்தர்ஷன் நிலையங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற உதவிபொறியாளர் முத்துக்கிருஷ்ணன் இன்று காலமானார்.

அன்னாருக்கு வயது 69.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளில் நெல்லை அணி – திருச்சியையும்

கோவை அணி – திருப்பூரையும் இன்று எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖